தமிழ் வாழ்க.

தமிழ்ப் பொழில்

துணர் ௪௮

ஆனந்த ஆண்டு

1974 – 75.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர் :

திரு. அரங்க வே. சுப்பிரமணியம், பி. ஏ.,

உள்ளுறை.

ஆனந்த ஆண்டு துணர் 48 மலர் க-ம்உ

(1974 — 75) பக்கம்

1 அன்னை
பேராசிரியர். ச. பாலசுந்தரம் 202
2 ஆசிரியர் நல்லந்துவனர்
த. இராமநாத பிள்ளை, பி ஏ., 42
3 ஆசிரியர் மணி
நெ. து. சுந்தரவடிவேலு. எம். ஏ., எல். டி., 176
4 ஆறும் காலும்
பேராசிரியர் சி. கோவிந்தராசன் 31
5 இயற்கைப் புலவர் கம்பர்
க. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்.. 58. 83. 150
6 இலக்கியத் துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப் பணிகள் — பெருஞ்சித்திரனர்
ஆசிரியர், தென்மொழி 95
7 "இளமை"
பேராசிரியர். ச. பாலசுந்தரம் 170
8 எண்ணமைப்புள் ஐந்து
பேராசிரியர். ச. பாலசுந்தரம் 22
9 எது இலக்கியம்?
பேராசிரியர். சொ. சண்முகானந்தம், எம். ஏ, 225
10 "ஐயவி"
நெல்லை — ந. சொக்கலிங்கம். எம். ஏ. 180
11 கச்சத் தீவுக் கருத்தரங்கு
புலவர். செ. இராசு 90
12 கம்பன் நூலில் சில ஐயங்கள்
நக்கீரன் வழியடிமை —
புலவர், பி. மா. சோமசுந்தர முதலியார். 255
13 கவிஞர் பாரதிதாசனின் கடவுட் கொள்கை
ஓ. ஆரோக்கியநாதன், எம். ஏ., 45
14 கழாரும் புகாரும்
கோ. தெய்வநாயகம், எம். ஏ, 285
15 காட்சியும் கற்பனையும்
டாக்டர். சொ. சிங்காரவேலன் 51
16 கால அடிப்படையில் பழமொழிப்பாகுபாடு
பேராசிரியர் வ. பெருமாள், எம் ஏ., பி. டி 92

17 கையறவு : டாக்டர் மு. வ. 216
தமிழ்க்கடல் ராய. சொ.
திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணி } 217
அறிஞர் டாக்டர் மு வ. வுக்கு அஞ்சலி
அ. பிச்சை, எம். ஏ., 218
18 கோனுட்சியில் குடியாட்சி — திருக்குறள்
பேராசிரியர் கு சிவமணி 10
19 சங்கக் காலமே, சங்க காலமன்று
ஆபிரகாம் அருளப்பன் 156
20 'சிலம்புச் செல்வம்'
பி. சோ. பாண்டியன் அறிவுடை நம்பி 36
21 "தமிழச்சியின் கத்தி" யில் உவமை நயமும் கதையமைப்பும்
S ஆரோக்கியநாதன், எம். ஏ. 219
22 தமிழர் என்பது என்றே? எவ்வாறே?
புலவர். அ வைத்திலிங்கம் 127
23 தமிழன்பர்கட்கோர் அமிழ்தான வாய்ப்பு
தலைவர் — மாணவர் தேர்வகம் — ஆரணி 128
24 தமிழ்நூற் குறியீட்டு விளக்கம்
பேராசிரியர், ச. பாலசுந்தரம் 239, 264, 296, 325
25 தனித் தமிழ்
ந. மு, கோவிந்தராய நாட்டார், பி ஏ, எல்.டி. 303
26 தென்மொழி 119
27 தொல்காப்பியரின் மாட்டு
டாக்டர். சோ. ந கந்தசாமி, எம். ஏ., எம் லிட்.,
120. 129
28 தொன்றும் தொண்டும்
பேராசிரியர் கொண்டல் சு மகாதேவன்,
எம். ஏ., பி எசி. 247
29 நடை நலம்
புலவர். இ. சுந்தரமூர்த்தி, எம். ஏ, 63
30 "நட்பு"
கோ. மா. இராசகோபாலன் 91
31 பட்டினப் பாலை
K சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்., 14
32 பண்டிதரும் — பாமரரும்
ந. மு. கோவிந்தராய நாட்டார், பி. ஏ, எல் டி, 259
33 பழமொழியும் — கம்பராமாயணமும்
பேராசிரியர். வ. பெருமாள் 1
34 பாராட்டி வாழ்த்துகின்றோம்
பொழிற்றெண்டர் 302

35 பிம்பிசாரக் கதை
டாக்டர். சோ. ந. கந்தசாமி, எம். ஏ., எம். லிட்., 312
36 புகார்த்துறை
பேராசிரியர். கோ. தெய்வநாயகம், எம். ஏ.. 232
37 புரட்சிக் கவிஞரின் கற்பனை வளம்
இராம. சுப்பிரமணியன்,
எம். ஏ., பி. லிப், எஸ்ஸி, பி. ஜி. எல். 191
38 புரட்சிக் கவிஞரின் காதல்
இராம. சுப்பிரமணியன்,
எம். ஏ., பி. லிப். எஸ்ஸி. பி. ஜி. எல். 275
39 புரட்சிக் கவிஞரின் குறுந்தொகைச் செல்வங்கள்
இராம. சுப்பிரமணியன்,
எம். ஏ., பி. லிப் எஸ்ஸி. பி. ஜி. எல். 135
40 பெங்களூர்த் தமிழ்ச் சங்கம்
க. சுப்பிரமணியன் 56
41 பெரியர் — சிறியர்
கோ. மா. இராசகோபால் 210
42 மதிப்புரை
பொழிற்றொண்டர் 60
43 மணிமேகலைக் கருத்தகம்
தமிழ்த்துறை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 321
44 யாண்டு இதனெதிரா மாண்டு
நடன காசிநாதன், எம். ஏ, 206
45 யாதும் ஊரே யாவரும் கேளிர்
K. சோமசுந்தரம், பி. எ., பி. எல்,
211. 236. 271, 290, 317
46 '' யாழ் நூல் ''
புலவர் க. வெள்ளைவாரணனர் 159
47 வாழும் இலக்கியம்
பேராசிரியர் சொ. சண்முகானந்தம், எம், ஏ. 142
48 வேலை பெருத தமிழ்ப் பட்டதாரிகள் துணை நிலையம்
தமிழ்ச் சங்கம் — காரைக்குடி 118
49 விழாக்கள்
உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி
மாணவர் இலக்கிய மன்றத் தொடக்க விழா 155
கரந்தைப் புலவர் கல்லூரி
இளங்கோவடிகள் தமிழ்க் கழகத் தொடக்கவிழா 154
கலைமகள் விழா 246
யாழ்நூல் வெளியீட்டு விழா 168
உலகத் தமிழர்கள் பங்கு கொள்ளும் பெருவிழா
டாக்டர் சாலை. இளந்திரையன் 310
50 அஜ்ஞாநத்தின் வழக்கீடு
வா. வே. மாணிக்கம் நாயக்கர் 331

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ௰௫	மலர்
௪௮	ஆனந்த, சித்திரை (1974 — ஏப்ரல் — மே)	க

பழமொழியும் கம்பராமாயணமும்

பேராசிரியர் வ பெருமாள்,
எம். ஏ. பி. டி., எம். ஆர். ஏ. எஸ் ,
தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் & தமிழ்த் துறைத் தலைவர்,
முதல் நிலைக் கல்லூரி, உரிகம், கோலார் தங்க வயல்,
மைசூர் மாநிலம்

பிரமாதீச – கார்த்திகை இதழ் தொடர்ச்சி

பாவத்தின் வடிவமாக இருந்த இராவணனைக் கொல்லுவதற்காகவே தெய்வத்தின் திருவுருவாம் இராமன் தோன்றினன் என்பது பொதுவான கருத்து. இக் கருத்தை யொட்டியே 'இராமன் பிறப்பு இராவணன் இறப்புக்கு', 'தசரதன் மகன் தசகண்டனுக்கு எமன்' என்னும் பழமொழிகள் தோன்றின.

உலகம் முழுதும் ஒரு குடைக்கீழ் ஆளும் மாபெரும் வேந்தனாக இருந்தாலும், அவனுக்கும் துன்பம் உண்டு. அரண்மனையில் இன்பமாக இருக்கவேண்டிய இராமன் காட்டில் புல் படுக்கையில் படுத்து உறங்கினன், 'இராமனுக்கும் ஆரண்ய வாசம் லபிக்கலையோ ?' 'இராமனுக்கும் தர்ப்பைப் படுக்கை லபிக்கலையோ ?' முதலியவை இராமாயணப் பழமொழிகள்.

'அல்லல் ஒரு காலம் செல்வம் ஒரு காலம்'. 'யானைக்கொரு காலம் பூனைக்கொரு காலம் ?', 'முப்பது வருஷம் வாழ்ந்தவனுமில்லை முப்பது வருஷம் கெட்டவனுமில்லை', 'பாயில் படுத்தவன் பாயிலேயே படுத்திருப்பானு ?' முதலிய பொதுப் பழமொழிகளும் இங்கு ஒட்டி நோக்கத் தக்கன. வாழ்வும் தாழ்வும் மாறி மாறி வரும் என்பதை உணர்த்த மேற் குறிப்பிட்ட இராமாயணப் பழமொழிகளைச் சொல்வதுண்டு.

மக்கள் சிலர்க்கு அரசியல் உணர்ச்சியோ நாட்டுப் பற்ருே இருப்பதில்லே. அவர்கள் தம் அலட்சிய மனப்பான்மையையும், அக்கறையின்மையையும் காட்ட 'இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன?', 'இராமன் ஆண்டால் என்ன? இலட்சுமணன் ஆண்டால் என்ன?', 'இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? கூட இருந்த குரங்கு ஆண்டால் என்ன?' என்று சொல்லுவார்கள். இவை யாவும் பழமொழிகளாக நிலேத்துவிட்டன. தலைவன் நல்லவனுக இருந்தால் தொண்டனும் நல்லவனுக இருப்பான் என்னும் கருத்தை உணர்த்த, 'இராமனேப்போல் அரசன் இருந்தால் அனுமானேப்போல் சேவகன் இருப்பான்' என்று மக்கள் சொல்லுவார்கள். மக்கள் மொழியே பழமொழியாகி விட்டது. 'இருக்கிறவன் ஒழுங்காயிருந்தால் சிரைக்கிறவன் ஒழுங்காய்ச் சிரைப்பான்' என்னும் பழமொழியும் ஈண்டு நினைவு கூரத்தக்கது.

'தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்' என்பது பழமொழி. பற்றற்ற இராமனே சீதையைப் பறிகொடுத்தவுடன் கலங்கிப் புலம்பினுன். 'இராமனேயானுலும் சீதைக்காக அழ வில்லையா?' என்பது பழமொழி. இராமன் பெயரைச் சொல்லுவதும் கேட்பதும் இனிமையும் பெருமையும் ஆகும். இராமன் பெயரைச் சொன்னுலும் சொல்லக் கேட்டாலும் பிறவி நீங்கும் என்பது நம்பிக்கை. 'இராமநாமமே கற்கண்டு. அதன் ரசம் அறியாதவர் கற்குண்டு என்பது பழமொழி.

இராமன் பெயர் :

இராமன் பெயரைச் சூட்டி மகிழ்வதில் நம் நாட்டு மக்களுக்குப் பெரு விருப்பம் உண்டு. பெற்ருேர் தம் முதல் மைந்தனுக்கு இராமன் என்றும், இரண்டாவது மைந்தனுக்கு இலக்குவன் என்றும் பெயர் சூட்டுவதை இன்றும் காணலாம். அண்ணன் தம்பியாகிய சர். ஏ. இராமசாமி முதலியாரும், சர். ஏ இலட்சுமணசாமி முதலியாரும் இராம இலக்குவன் பெயரைத் தாங்கியிருப்பது சிறந்த எடுததுக் காட்டாகும். இராமன் பெயர் பல்வேறு வடிவங்களில் நம் நாட்டு மக்களுக்குச் சிறப்புப் பெயர்களாக வழங்கி வருகின்றன.

மிகுதியாக உண்பவனேயும், உண்பதில் மிகுந்த ஈடுபாடு உள்ளவனேயும் சாப்பாட்டு ராமன் என்று வேடிக்கையாகச் சொல்வதுண்டு.

அனைத்துத் துறையிலும் மிகச் செம்மையாக அமைந்த நாட்டை ஆங்கிலத்தில் உடோபியா (utopia) என்று சொல்வதைப்போல நம் மொழியில் இராமராஜ்யம் என்று சொல்வதுண்டு. காந்தியடிகள் இந்தியாவை இராமராஜ்யமாக்க அரும்பாடுபட்டது அனைவரும் அறிந்ததே.

சீதை :

சீதையை இலக்குமியின் அம்சமாகக் கருதுவது மரபு. சீதையின் பண்பு நலன்களை எந்த அளவுக்குப் போற்றிப் புகழ இயலுமோ அந்த அளவிற்குப் போற்றிப் புகழ்ந்துள்ளார் கம்பர். இராமன் கானகத்திற்குச் சென்றபோது சீதையும் உடன் சென்றாள். அவள் இராமனை நோக்கி 'உன் பிரிவைக் காட்டிலும் காடு சுடுமோ' என்று வினவினாள். காட்டின் கொடுமையையும் வெம்மையையும் கூடப் பொருட்படுத்தாமல் தன் கணவனுடன் இருந்துகொண்டு எப்போதும் அவனுக்குத் தொண்டு செய்யவே விரும்பினாள் சீதை. இந்நிலையில் தோன்றியது 'இராமன் இருக்குமிடம் சீதைக்கு அயோத்தி' என்னும் பழமொழி.

சீதையின் கற்புத் திறத்தால் இராவணன் அழிந்தான்; இலங்கையும் அழிந்தது. இவ்வுண்மையைக் கீழ்க்காணும் பழமொழிகள் மெய்ப்பிக்கின்றன. 'சீதை பிறக்க இலங்கை அழிய.' சீதை பிறந்தாள் இலங்கை அழிந்தது. கொடியவர்களிடையில் நல்ல பெண்மணி ஒருத்தி இருந்தால் அவளை 'அசோக வனத்துச் சீதைபோல' என்று குறிப்பிடுவதுண்டு. சீதை பிறந்ததால் கற்பு, பெண்மை, நோன்பு முதலிய யாவும் ஆக்கமும் பெருமையும் பெற்றன. எனவே ஆக்கும் ஆற்றல் சீதைக்கு உண்டு. அதைப்போலவே சீதை பிறந்ததால் இராவணன் அழிந்தான், அரக்கர்கள் அழிந்தனர்; இலங்கையும் அழிந்தது. சீதைக்கு ஆக்கும் ஆற்றலும் உண்டு: அழிக்கும் ஆற்றலும் உண்டு என்பதை உணர்த்த 'ஆவதும் பெண்ணாலே. அழிவதும் பெண்ணாலே' என்னும் பழமொழி தோன்றியது.

இலக்குவன் :

இலக்குவனுக்கு முன்கோபம் மிகுதி. இராமன் அமர வேண்டிய அரியணையில் பரதன் அமரவிருக்கிறான் என்பதை அறிந்தவுடன் அவன் அடைந்த கடுஞ்சீற்றத்துக்கு அளவே இல்லை. அவன் விழிகளில் கோபக் கனல் வீசியது. "புருவம்

நெரிந்தது; உடம்பில் வியர்வை மிகுதியாகத் தோன்றியது. உள்ளிருந்து உயிர்ப்பு எழுந்தது. என் சிற்றன்னை (கைகேயி) 'சிங்கக் குட்டிக்கு இடுகின்ற சுவைமிக்க இறைச்சியை ஓர் அற்ப நாய்க்குட்டிக்கு இட நினைத்தாள்' என்று இலக்குவன் பெருஞ் சீற்றத்துடன் கூறினன்.

> "சிங்கக்குரு ளைக்கிடு தீஞ்சுவை ஊனை நாயின்
> வெங்கட்சிறு குட்டியை ஊட்ட விரும்பி னாளால்
> நங்கைக்குஅறி வின்திறம் நன்றிது நன்றி தென்னாக்
> கங்கைக்கிறை வன்கம லக்கை புடைத்து நக்கான்."
>
> —கம்பராமாயணம்: அயோத்தியா காண்டம்
> நகர் நீங்கு படலம்.

இலக்குவன் முன்கோபக்காரன் என்பதை மெய்ப்பிக்க இதைப் போன்ற சான்றுகள் இராமாயணம் முழுவதும் உண்டு. முன்கோபக்காரனைக் குறிப்பிடுமிடத்து 'இலட்சுமணன்போல இவனுக்கு மூக்குமேல் கோபம்' என்று சொல்வதுண்டு இது பழமொழியாக நிலவி வருகின்றது

அனுமன் :

அனுமன் ஆற்றல் மிக்கவன் என்பது அனைவரும் அறிந்த உண்மை. 'அனுமாருக்குத் தன் பலம் தெரியாததுபோல' என்பது பழமொழி. 'யானைக்குத் தன் பலம் தெரியாது' என்னும் பழமொழியை இங்கு ஒப்புநோக்குதல் வேண்டும். அனுமன் வால் மிகமிக நீண்டது. ஏதாவது ஒரு கதையோ செயலோ மிக நீளமாக இருந்தால் அதன் நீளத்தைக் குறிப்பிட 'அனுமார் வால் போல' என்றும், 'அனுமார் வால்போல நீண்டுகொண்டே போனல்' என்றும் பொதுமக்கள் சொல்லுவார்கள். அனுமன் இலங்கைக்கு இராம தூதனைச் சென்றபோது தன் நீண்ட வாலையே அரியணையாக ஆக்கிக்கொண்டு அமர்ந்தான். 'இராவணனுக்கு இரத்தின சிம்மாசனம் அனுமானுக்கு வாலே சிம்மாசனம் என்பது பழமொழி அனுமான் இராம பக்தன். இராமனுக்கு உயிர்த் தொண்டன். இராமன் பாலும் இராமா யணத்தின்மீதும் அனுமனுக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. இராமன் பெயரை எப்போதும் சொல்லிக்கொண்டே இருப்பான்.

> "வனைகழல் இராமன் பெரும் பெயர் ஓதி
> இருந்தனன் வந்தயல் மறைந்தே
>
> —சுந்தர காண்டம். காட்சிப் படலம்.

'எங்கே இராமாயணம் அங்கே அனுமார் போல', 'எங்கே இராமாயணப் பிரவசனம் அங்கே அனுமார் பிரசன்னம்', 'இராமாயணம் நடக்குமிடமே அனுமாருக்கு இராமபதம்' என்னும் பழமொழிகள் அனுமனுக்கு இராமன்பால் உள்ள காதலையும், இராமாயணத்தின் மீதுள்ள ஆழ்ந்த பற்றையும் புலப்படுத்துகின்றன. 'பிச்சையெடுத்ததாம் பெருமாள் அதைப் பிடுங்கியதாம் அனுமார்' என்று அனுமனைப்பற்றி ஒரு நகைச் சுவைப் பழமொழி வழங்கிவருகின்றது. அனுமன் எதையும் சாதிக்க வல்லவன். அவன்மட்டும் நம்முடன் இருந்தால் நமக்கு வேண்டியது வேண்டியவாறு கிட்டும். இவ்வுண்மையை 'அனுமார் இப்போது இங்கிருந்தால் சஞ்சீவி பர்வதம் இங்கே வராதா? என்னும் கேள்வியைப் பழமொழியாகச் சொல்வதுண்டு.

அனுமன் இலங்கைக்கு எரியூட்டி அழித்தான். இச் செய்தி பழமொழியாகவே அமைந்துவிட்டது. ஓரிடத்தில் பெருந் தீ பற்றி எரிந்துவிட்டால் 'இங்கே லங்கா தகனம் நடந்து விட்டது' என்று பழமொழியாகவே சொல்வது உண்டு.

இராமன் வானரப் படை எங்கிருந்து என்ன செய்தாலும் வியப்பாகவும் வேடிக்கையாகவும் இருக்கும். 'இராமன் பட்டாபிஷேகத்தில் வானரங்கள் விருந்து சாப்பிட்டதுபோல' என்பது பழமொழி. 'கிஷ்கிந்தாவாசிகள் எங்கே போனாலும் விநோதம் தான் என்பது மற்றொரு பழமொழி.

இராவணன் :

இராவணன் ஆற்றல் மிக்கவன் அவன் ஆற்றலைப் பல பாடல்களில் கம்பர் புகழ்ந்து பாடியுள்ளார். ஆற்றலைக் குறித்து இகழும்போது 'இவன் என்ன பத்துத் தலை இராவணனோ' என்று சொல்வது மரபு இது பழமொழியாக நிலைத்துவிட்டது. இராமன். இராவணன்படைவீரர்களை அழிக்க அழிக்க மிகுதியாக வந்துகொண்டே இருந்தார்கள் என்பதை 'மூட்டைப் பூச்சி இராவணன் சைந்நியம்போல' என்று பழமொழியாகக் கூறுவது மரபு இராவணன் இராமன் படையைக் கண்டு கலங்கினன். எவ்வாறு கலங்கினன்? இதோ விடை பழமொழி வடிவத்தில் இருக்கின்றது. 'கடன் பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினன் இலங்கை வேந்தன்'. இதனைக் கம்பர் வாக்கு எனக் கொள்வாரும் உண்டு. அல்ல என்று மறுப்பாரும் உண்டு. இது மேலும் ஆராய்தற்குரியது. பண்டைக் காலத்தில் கடன்

வாங்கியவன் கலங்கினான். இக்காலத்தில் கடன் வாங்கினவன் கலங்கவில்லை, கடன் கொடுத்தவன்தான் கலங்கிக்கொண்டிருக்கின்றான். இன்றைய சூழ்நிலையில் இராவணன் அடைந்த கலக்கத்தைச் சொல்லப் பழமொழி தோன்றுமானால் 'கடன் பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்பதற்கு மாறாகக் 'கடன் கொடுத்தார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று தோன்றியிருக்கும்.

கும்பகருணன் :

'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்னும் பழமொழிக்கு இலக்கியமாகத் திகழ்ந்த கும்பகருணன் தூக்கத்தில் மன்னன் என்பது அனைவரும் அறிந்த உண்மை. அவன் உறங்கத் தொடங்கினால் அவனை எழுப்புவது எவ்வளவு கடினம் என்பது இராமாயணம் அறிந்த எல்லோருக்கும் தெரியும் ஆயிரம் அரக்கர்கள் கூடி உறங்கிக்கொண்டிருந்த கும்பகருணனை பெரிய உலக்கையால் அடித்து எழுப்பவேண்டியிருந்தது என்றால் அவனது உறக்கத்தின் தன்மையை அறிந்துகொள்ளலாம்.

''என்றலுமே அடிவணங்கி ஈரைஞ்ஞூற்று இராக்கதர்கள்
வன்தொழிலால் துயில்கின்ற மன்னவன்தன் மாடணுகி
நின்றிரண்டு கதுப்புமுற நெடும்உசலம் கொண்டடிப்பப்
பொன்றினவன் எழுந்தாற்போல் புடைபெயர்ந்தாங்கு
எழுந்திருந்தான்.

—யுத்த காண்டம்.
கும்பகருணன் வதைப் படலம்

மிகுதியாகத் தூங்குபவனைக் குறிப்பிடுமிடத்துக் 'கும்பகருணன் தம்பி இவன்' என்று சொல்வதைக் கேட்கலாம்,

வாலி :

சுக்ரீவன் அண்ணனாகிய வாலி ஆற்றலில் உயர்ந்தவன். சுருங்கக் கூறுமிடத்து அவன் இராவணனைவிட ஆற்றல் வாய்ந்தவன். வாலி கண்ணுக்கு இராவணன் ஓர் எளிய பூச்சியாகவே தென்பட்டான். 'வாலிக்கு இராவணன் பத்துத் தலைப் பூச்சி' என்பது பழமொழி. எச்செயலும் வரிசை முறையாகத்தான் நடைபெறுதல் வேண்டும். முதலில் செய்யவேண்டியதை முதலிலும் அடுத்துச் செய்யவேண்டியதை இரண்டாவதுமாகச் செய்வதுதான் மரபு. செயலில் முறையின் வைப்பு

இருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்த 'வாலி வதைக்குப் பிறகுதானே பட்டாபிஷேகம்' என்று கூறுவதுண்டு. 'தோட்டம் நிலைத்தல்லவா தென்னம்பிள்ளை நடவேண்டும்' என்னும் பழமொழியும்', 'பிள்ளை பெற்ற பிறகல்லவா பெயர் வைக்க வேண்டும்' என்னும் பழமொழியும் இவண் ஒப்பு நோக்கத் தக்கன.

கூனி (மந்தரை):

கைகேயி மிக நல்லவள், தூயவள், அவள் தூய உள்ளத்தில் நஞ்சைப் பாய்ச்சினுள் கூனி. கூனியின் கொடுமையைக் கூறுவதற்கு 'ஒரு கூனி போதுமே ஒன்பது குடியைக் கெடுக்க' என்னும் பழமொழி தோன்றிற்று.

கைகேயி:

'கரைப்பவர் கரைத்தால் கல்லும் கரையும்' என்பது பழமொழி. தன்னலமற்ற கைகேயியை தன்னலமுள்ளவளாக ஆக்கி விட்டாள் கூனி. அதன் விளைவாக கைகேயி தசரதனிடம் இரு வரங்களைக் கேட்டாள். கைகேயியின் வரம் தசரதன் உயிரை மாய்த்துவிட்டுப் பழமொழியாகிவிட்டது 'கைகேயி கேட்ட வரம் போல' என்பது பழமொழி.

தாடகை:

தாடகை ஓர் அரக்கி. கொடிய அடங்காப் பிடாரியை மனைவியாகப் பெற்றவன் 'அங்கொரு தாடகை இராமாயணத்திலே. இங்கொரு தாடகை என் வீட்டிலே' என்று சொல்லுவான். இச்சொல் பழமொழியாகி வேரூன்றிவிட்டது.

மாரீசன்:

இராவணனுக்குத் துணையாக மான் வடிவத்தில் காட்சியளித்தான் மாரீசன். அவனுடைய கபட நாடகத்தை விளக்கப் 'பொய்மான் கரட்டிலே போய்ப் பார் மாரீசனை', 'மாரீசனைப் பார்க்கப் பொய்மான் கரட்டுக்கா போகணும்? இவனைப் பார்த்தால் போதாதா?' என்னும் பழமொழிகள் தோன்றின. 'பொய் மான் கரடு' தமிழ் நாட்டில் சேலத்திற்கு அருகில் இருக்கின்றது.

கம்பர் பயன்படுத்திய பழமொழிகள் :

கம்பர் காலத்தில் பல்லாயிரம் பழமொழிகள் வழக்கில் இருந்தன என்பதற்கு அகச் சான்றுகள் உண்டு. கம்பர் அவர் காலத்தில் வழங்கிய பல பழமொழிகளைத் தம் காப்பியத்தில் கையாண்டுள்ளார். அவை எல்லாவற்றையும் தொகுத்து ஆராயத் தொடங்கின் இக்கட்டுரை மிகப்பெரிய நூலாக விரிந்து விடும். எனவே விரிவஞ்சி. 'பானைச் சோற்றுக்குப் பருக்கை பதம்' என்னும் பழமொழிக்கு ஏற்ப ஒரு சில பழமொழிகளை மட்டும் இவண் ஆராய்வோம்.

'பாம்பறியும் பாம்பினகால்' என்பது இன்றும் வழக்கில் உள்ள பழமொழி. 'பாம்பின் புற்றுப் பாம்பிற்குத்தான் தெரியும்' என்பது இப்பழமொழியின் கருத்து, இப்பழமொழியைக் கம்பர் எடுத்தாண்டதுடன் இது பழமொழி என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்

"பாம்பறியும் பாம்பின்கால் என மொழியும்
பழமொழியும் பார்க்கி லீரோ'

—கம்பராமாயணம் ஆரண்ய காண்டம்
சூர்ப்பணகைப் படலம்.

'புலி அருகில் இருக்கக் குட்டியைப் பிடிக்க முடியாது' என்பது பெருவழக்கில் உள்ள பழமொழி. இப்பழமொழி மக்கள் அனைவரும் அறிந்ததே என்பதைக் கம்பரே உறுதியாகக் கூறி யுள்ளார்.

"புலிதானே புறத்தாகக் குட்டிகோட் படாதென்னும்
ஒலியாழி உலகுரைக்கும் உரை பொய்யோ'

—கம்பராமாயணம் : ஆரணியகாண்டம்
சூர்ப்பணகைப் படலம்

கம்பர் இப்பழமொழியை உரை என்று குறிப்பிட்டுள்ளார். 'எறும்பு முதல் யானைவரை' என்பது பழமொழி. இப்பழமொழி யைக் கம்பர்தம் பாடலில் கையாண்டுள்ளார்.

"எறுப்பினங் கடையுற யானையே முதல்"

—ஆரண்ய காண்டம் : கவந்தன் வதைப் படலம்.

பூனையிடம் அகப்பட்ட கிளியைப்போல' என்பது இன்றைய வழக்கில் உள்ள பழமொழி. கம்பர் இதனைப் 'பூசை நெடுவாயின் மறுகும் பஞ்சரக்கிளி' (ஆரணிய காண்டம், விராதன் வதைப் படலம்) என்று வழங்கியுள்ளார். 'குரங்கு கையில் பூமாலை கிடைத்ததுபோல' என்னும் பழமொழி இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. 'வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல' என்பது அனைவரும் அறிந்த பழமொழி. இப்பழமொழி கம்பராமாயணத்தில் இடம்பெற்றிருக்கின்றது.

கம்பர் வாய்மொழி பழமொழி:

கம்பர் வாசகங்களில் பல பொதுமக்களால் நன்கு அறியப் பட்டுப் பழமொழிகளாகவே ஆகிவிட்டன. எடுத்துக்காட்டாக ஒன்றை மட்டும் குறிப்பிட்டிருக்கிறோம் இராமனுக்கும் இராவணனுக்கும் நடைபெற்ற போரில் இராமன் வெற்றி முகத்திலும் இராவணன் தோல்வி நிலையிலும் இருக்கின்றனர். இராவணன் படைக்கலம் இழந்த நிலையில் நிற்கின்றான். அப்போது இராமன் அருள் உள்ளத்துடன் இராவணனை நோக்கி, 'இன்று போய்ப் போர்க்கு நாளை வா' என்று அருள் உணர்ச்சியுடன் சொன்னான். இராமன் கூற்றாக அமைந்த கம்பர் வாய்மொழி பழமொழியாகிவிட்டது. இவ்வாறாகப் பழமொழிகள் துணைகொண்டு கம்பராமாயணத்தை ஓரளவு இக்கட்டுரையில் கண்டோம்.

கோனாட்சியில் குடியாட்சி - திருக்குறள்

பேராசிரியர். கு. சிவமணி,

பிரமாதீச - தை இதழ் தொடர்ச்சி

காவிரிப்பூம்பட்டினத்தில் வளம் தலைமயங்கும்படியாகக் குவிந்து கிடந்தன, பகைவர் தரும் திறைப்பொருளும் பிறவும் அரசனுக்குரிய பொருள்களாகும். "வச்சிர நாட்டுக்கோன் கொடுத்த கொற்றப் பந்தரும்" "மகதவேந்தன் தந்த பட்டி மண்டபமும்". "அவந்தி வேந்தன் அளித்த உயர்ந்த தோரணவாயிலும்" தோற்ற மன்னர்களின் திறைகளாக, வடநாட்டு வெற்றியின் போது திருமாவளவன் பெற்றான்" என்று சிலம்பு குறிக்கின்றது. இத்தகைய ஒன்னார்த் தெறு பொருளும் வேந்தனுக்குரிய பொருள்களாகும் பொருள் செயல்வகையைச் சூழும்போது அரசன் அன்போடும் அருளோ" டும் பொருந்தாத பொருள்களை நீக்கிவிடவேண்டும் என்பது திருவள்ளுவர் துணிபாகும்.

வரும்பொருள் துணிந்து தேர்ந்து, அவையஞ்சாது சொல் லாற்றலுடன் நல்லவற்றை உறுதியாக உரைக்கும் அமைச்சர் களும், அறிவு ஆராய்ச்சி ஆன்ற குடிமையும் கொண்டு, மாற்றர சிடமும் அஞ்சாது. காலமும் இடமும் கருதிச் சொற்சோர்வின்றி மொழியும் தூதுவர்களும். இன்னார் இனியர் என்னாது எல்லோ ரையும் நெருங்கி ஆயும் ஒற்றர்களும் அரசியலில் திருவள்ளுவ ரால் சிறப்பிக்கப்பெறுகின்றனர். பொருட்பாலின் கடைசியில் அரசியலுக்கு இன்றியமையாத உறுப்பாகிய குடிமக்கள், குடியியல என்னும் தனிப் பகுதியில் குறிக்கப்படுகின்றனர்.

4. திருவள்ளுவரும் இன்றைய குடியாட்சிக் கோட்பாடுகளும்:

திருவள்ளுவர், கோனாட்சி முறைகளைப்பற்றிக் குறிப்பிட் டிருந்த போதிலும் குடியாட்சித் தத்துவத்தையே வலியுறுத்து கின்றார். மரபு வழி வருகின்ற மன்னரைப்பற்றிப் போற்றாமல் பொதுவகையில் மன்னர் இயல்புகளைக் கூறிச் செல்வதும், குடியியல் என்று 13 அதிகாரங்களை ஒதுக்கி அவற்றுள் குடி மக்களின் தனி பொதுப் பண்புகளைப் பற்றி விரிவாகக் கூறி யமையும், திருவள்ளுவர் மக்கள் பால் மிகுந்த நம்பிக்கை வைத் துள்ளார் என்பதைக் காட்டுகின்றன. மற்றும், கோனாட்சியில்

மட்டும் குடியாட்சியைப் பற்றிக் குறிப்பிடாமல், குடியாட்சி எங்கெங்கெல்லாம் மலர்கின்றதோ அங்கெல்லாம் வாழக்கூடிய மக்கள் தங்களை எவ்வாறு நல்ல குடி மக்களாக உருவாக்கிக் கொள்ளவேண்டும் என்பதையும் திருவள்ளுவர் குடியியலில் விளக்கியுள்ளார். ஆகவே, வள்ளுவரின் குடியியல், எக்காலத்துக்கும் எவ்வாட்சிக்கும் பொருந்தும் குடிமக்களை உருவாக்குகின்றது. நாட்டு மக்களைப் பொறுத்தே ஒரு நாடும் நல்ல நாடாக அமையும் "எவ்வழி நல்லை ஆடவர். அவ்வழி நல்லை, வாழிய நிலனே" என்னும் புறப்பாடலும் கருதத்தக்கது. குடியாட்சி வெற்றி பெறவேண்டுமென்றால் முதலில் மக்கள், தங்களைத் தகுதியுள்ள குடிமக்களாக ஆக்கிக் கொள்ளவேண்டும்.

அரசியல் அறிஞர்கள் "குடியாட்சி, இப்போது திசைத் தெரியாமல் தடுமாறுகின்றது" என்று குறிப்பிட்டுக் குடியாட்சி வெற்றியுருமைக்கான சில காரணங்களையும் கூறியுள்ளார்கள்.

1. குடியாட்சியிலுள்ள முதற்குறை: "ஆட்சியுரிமையுள்ள மக்கள் படிப்பறிவில்லாமல் இருப்பதால் அவர்களுக்கு அரசியல் நிலையும் வாக்குச் சீட்டின் மதிப்பையும் உணர்ந்துகொள்ள முடியவில்லை' என்பதாகும் இக் குறைபாட்டினை நீக்க வள்ளுவர் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை போன்ற அதிகாரங்களையே அமைத்து, ஒருவன் கசடறக் கற்கவேண்டும், சாகும் வரை கற்கவேண்டும்; கற்றவனே மனிதன்; கற்கவில்லையாயினும் கேட்கவேண்டும் என்றெல்லாம் விளக்கி,

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவில்லாதார்"

என்றும் வலியுறுத்துகின்றார்.

2 "குடியாட்சியில் மக்கள் விழிப்புடன் இருந்து செயலாற்ற வேண்டும். இல்லையேல் அவர்களால் குடியாட்சியின் நோக்கங்களைப் புரிந்துகொள்ள இயலாது" என்பது மற்றொரு குறை. திருவள்ளுவர் இதற்கு மாற்றமாக, ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினையுடைமை .போன்ற அதிகாரங்கள் வாயிலாக எப்போதும் சோம்பலின்றி ஊக்கத்துடன் செயல்புரியவேண்டும் என்பதை

"மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும்"

என்றும்,

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலேவின்றித்
தாழாது உஞற்று பவர்"

என்றும் கூறி மக்களின் விழிப்புணர்ச்சியை வற்புறுத்துகின்ருர்.

3. "குடிமக்கள் உயர்ந்த சமூக உணர்வு, நாட்டு நிகழ்ச்சியில் ஆர்வம், நேர்மை, பொறுமை ஆகியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். இல்லேயேல் குடியாட்சி பயனளிக்காது" என்பது பிறிதொரு குறை, ஒழுக்கம், வாய்மை, நாணம், நகை, ஈகை, இன்சொல், இகழாமை, ஆகிய பண்புகளேக் குடிமக்கள் கொள்ள வேண்டும் என்று திருக்குறள் வலியுறுத்துகிறது. குடிமை; மானம், பெருமை, சான்ருண்மை, பணிவுடமை, நாணுடைமை, குடிசெயல்வகை போன்ற அதிகாரங்கள் உயர்ந்த சமூகப் பண்புகளேயும் ஒழுக்கங்களேயும் வற்புறுத்துகின்றன.

4. 'பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் நீக்கப்படவேண்டும் இல்லேயேல் குடியாட்சி வெற்றிபெருது" என்பது கொள்கை யாகும்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலே"

என்பது வள்ளுவர் கொள்கையாகும்.

"வஞ்சனேயால் பொருள் செய்து காத்தல். சுடாத பச்சை மண்கலத்துள் நீர் பெய்துவைத்ததைப் போன்றது" என்றும்; பிறர் அழுமாறு கொண்ட பொருளெல்லாம் பின்னர்த் தமம் அழுமாறு போய்விடும்" என்றும் வள்ளுவர் கூறியுள்ளார்.

"முறையற்றவனின் செல்வத்தை அழிக்கும் படைக்கருவி, அவனுல் பலர் துன்பமுற்றுப் பொறுக்கமுடியாமல் அழுத கண்ணீர் அல்லவா?" என்றும்,

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகுஇயற்றி யான்"

என்றும் திருவள்ளுவர் புரட்சிக்குரல் கொடுக்கின்ருர்.

5. குடியாட்சி வெற்றிபெறுவது மக்கள் கையில்தான் உள்ளது. அவர்கள் உயர் ஒழுக்கமும்; நாட்டுப் பற்றுடன் தியாக மனப்பாங்கும், தன்னடக்கமும் {பண்பாடும் உள்ளவர்களாக இருந்தால்தான் குடியாட்சி வெற்றிபெறமுடியும்" என்பது அரசியல் அறிஞர்களின் துணிபாகும்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்று ஒழுக்கத்தின் சிறப்பையும்,

"புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடும்
இரந்துகோள் தக்க துடைத்து"

என்று நாட்டுக்காக உயிர்துறக்கும் தியாக வாழ்வையும்,

"அடக்கம் அமரருள் உய்க்கும்" என்று அடக்கத்தின் இன்றியமையாமையையும் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார். இந்த உலகம் வாழ்வது எதனால் என்னும் வினாவுக்குத் திருவள்ளுவர்,

'பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அஃதின்றேல்
மண்புக்கு மாய்வது மண்"

என்று பண்புடையாரால்தான் உலகம் வாழ்கின்றது என்று விடையிறுத்துள்ளார். அன்புடைமையும், ஆன்ற குடிப்பிறப்பும் பணிவுடைமை என்னும் வழக்காகும். அன்பு. நாண், ஒப்புரவு, வாய்மை, கண்ணோட்டம் என்னும் ஐந்து குணங்களையும் கொண்டு மக்கள் சான்றோராக வாழவேண்டும் அப்படிப் பட்டவர்களாலேயே உலகம் வாழமுடியும். அவர்களால்தான் குடிசெயல்வகையை மேற்கொள்ளமுடியும். அக்குடியாண்மை மிக்கவர்க்குத் தெய்வம் மடியை வரிந்து கட்டிக்கொண்டு உதவ முன்வரும்.

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்"

என்பது வள்ளுவர் வாக்கு

கோனாட்சியில் மட்டும் திருவள்ளுவர் குடிமக்களின் இயல்பு களைக் கூறவில்லை எந்த ஆட்சியாக இருந்தாலும், அந்த ஆட்சியிலே அங்கமாக அமையும் மக்கள் நல்ல குடிமக்களாக உருவாகவேண்டியதன் இன்றியமையாமையைச் சுட்டிக் காட்டித், தமக்கும் சமுதாயத்துக்கும் எவ்வாறு பயனுள்ளவர்களாக வாழ வேண்டும் என்னும் வழிமுறைகளையும் கூறியுள்ள பொய்யில் புலவர் திருவள்ளுவரின் தொலைநோக்கு வியத்தற்குரியது.

வளர்க வள்ளுவம்! வாழ்க குடியாட்சி!

பட்டினப்பாலை

K. சோமசுந்தரம், B. A., B. L., தஞ்சை.

பட்டினப்பாலை பத்துப்பாட்டுத் தொகை நூலுள் ஒன்பதாவது பாட்டாகும். முந்நூற்றொரு அடிகளைக் கொண்ட இந்தப் பாட்டு தமிழுக்குரிய தனிச் சிறப்பு வாய்ந்து ஆசிரியப் பாவாலும் வஞ்சிப் பாவாலும் கலந்து அமைந்துள்ளது இப்பாட்டின் கண் வஞ்சியடிகள் மிகவும் விரவிவருதலான் இதனை வஞ்சி நெடும் பாட்டு எனக் கூறுதலும் சாலவும் பொருத்தமுடைத்தே. சோழன் கரிகாற் பெருவளத்தான்மீது. கடியலூர் உருத்திரங் கண்ணனாரால் இந்நூல் பாடப்பட்டது பட்டினமும் பாலையும் கொண்டுள்ள இப்பாட்டு, பாலைத் திணையினைத் துணை பற்றியே பட்டினத்துச் சிறப்பைக் கூறுவது. பட்டினம் என்பது ஈண்டு சோழர்களின் தலைச் சிறந்த நன்னகரமாகவும் பெரிய துறைமுகமாகவும், பண்டு தமிழகத்தில் விளங்கிய காவிரிப் படைப்பைப் பட்டினத்தைக் குறிக்கும், குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம் நெய்தலென்றும் அகனைந்திணை யொழுக்சங்களின் நடுவணதாகிய பாலை யொழுக்கத்தை இப்பாட்டு பாரித்துரைக்கின்றது பகுப்பினைக் குறிக்கும் 'பால்' எனும் சொல்லினின்றும் தோன்றுவது பாலையாகும். பகுப்பு எனும் சொல் பிரிவை உணர்த்துதலான், பாலை பிரிதற்கிடனாயிற்று. பிரிதலும் பிரிதல் நிமித்தமும் பாலை உணர்த்துவதாயினும், பிரியக் கருதியதைக் கிளத்தலைப்பற்றி, இப்பாட்டு உளங்கவரும் வன்மை பெற்றிருத்தலை நோக்க, பாலைத்திணையின் அமைதியும் பாட்டின் இனிமையும் நன்கு புலனாகின்றது. நிழலும் நீருமில்லாது வெங்கதிரால் யாவரையும் வாட்டும் தன்மை பாலைக்குரியதாயினும் இப்பட்டினப் பாலை அன்பு வாழ்க்கைக்கு நிலைக்களனாய் அமைந்து மக்களை அன்பு நெறியில் இன்பமூட்டி இயங்க வைக்கும் பெற்றிவாய்ந்துள்ளதென்பதைத் தெற்றென விளங்கவைக்கும்

அகப்பொருளைப் பற்றிய இப்பாட்டு 'முல்லைப் பாட்டு' 'குறிஞ்சிப் பாட்டு' என ஏனைய பாட்டுகள் வழங்குவதுபோல் 'பாலைப்பாட்டு' என அமையாது, பட்டினப்பாலை என வழங்கி வந்துள்ள நுண்ணிய அடிப்படையை ஆய்தல் இன்றியமையாததாகும். இப் பாட்டினிலே, பட்டினத்துச் சிறப்பினைக் கூறும் பகுதி இருநூற்றுப் பதினெட்டு அடிகளிலும், பாலைப் பற்றிக் கூறும் பகுதி ஆறு அடிகளிலும் அமைந்துள்ளதினன், மிகுந்த அடிகளால் கூறப்படும் பட்டினத்தை முன்னதாகவும்,

குறைந்த அடிகளாய பாலையைப் பின்னதாகவும் வைத்து பட்டினப்பாலை என வழங்கப்பட்டதென பெரும்பான்மையோர் கூறுவர். ஆனால், இக்கருத்தினைத் தண்டமிழ்ச் சான்றோர் அகத்திருத்தி அகமகிழார் இவ்வண்ணம் கூறுவது பொரு ளிலக்கண அமைப்பின் மாட்சியையும் ஆட்சியையும் பிறழக் கண்டுகொண்டு வழுவியதாலாய விளைவேயல்லாது வேறல்ல. புறத்தே காணும் உலகியற்கைகளை விரியப் பயின்று, அதன் ஒட்பத்தை உள்ளியற்கையால் சுருங்கத் தெளிந்து, தாழாது கலைப் புலமையால் செய்யுள் யாத்தல் பாடலுட் பயின்று வரும் மரபு. இதனானன்றோ, அகக்கருத்தை கிளக்கும் பகுதி குறைந்த வரிகளிலும், புறத்தியல்களைக் கூறும் பகுதி அவ்வகப் பகுதியைவிடப் பன்மடங்கு விரிவுடையதாய், பழந்தமிழ்ப் பாக்களில், உள்ளுணர்வை உருவாக்கும் முறையில் வெகு அருமையாக விளக்கப்பட்டுள்ளன. பாடலுட் பயின்று வரும் மரபின் நுட்பத்தை நன்குணர்ந்து கடைப்பிடித்து வந்த சங்கத்துச் சான்றோர்களது பாக்கள் யாவும் இதன் காரண மாக, அழகுண்மையும், இனிமையுங் கருவுற்று, இறவாத உயிர்களை மேவி, மக்களுயிர்க்கு நறும் பயனைப் பயந்து இதுகாறும் தனிச்சுடர் விரித்து நிலைபெற்றுத்திகழ்தல் வெள்ளிடைமலை.

அகமும் புறமுமாகிய இயற்கை முறையிலே யாக்கப்பட்டுள்ள முதல், கரு, உரிப்பொருள் என்ற மூன்றும் முறை சிறந்தன வாதலின், அவை பாடலுட் பயின்றவையெனத் தொல்காப்பி யத்து அகத்திணையியல் கூறும் முதற் பொருளும் கருப் பொருளும் புறப்பொருள்கள் உரிப்பொருள் அப்புறப்பொருள் களின் பயனால் எழும் தெள்ளுணர்வாக அகப்பொருளாய் விளங்கும். இம்மூன்று பொருள்களும் ஏதுவும் பயனுமாய் இழைந்து அகத்தினிமையை நுட்பதிட்பச் செறிவுடன் விளங்கவே, அவ்வினிமையின் ஓவியங்களாய், பத்துப்பாட்டி லுள்ள முல்லைப் பாட்டும் குறிஞ்சிப் பாட்டும், பொருளிலக்கண அமைதியை உரிய சிறப்பாகக் கொண்டு அமைந்துள்ளன. இப்பாக்களில் அகப்பொருட்டெளிவுக்குரிய முதற்பொருளும் கருப்பொருளுங்கொண்ட புறப்பொருள் விரிவு விளக்கங்களை, சிறப்பியல்புகளும் முல்லை நில நிகழ்ச்சிகளுடனும் குறிஞ்சி நில நிகழ்ச்சிகளுடனும் முறையே கிளர்ச்சிபட மொழியப்பட்டுள்ளன. ஆனால், பட்டினப்பாலையின்கண், ஆசிரியர் உருத்திரங்கண்ண னார், காவிரிப்பூம்பட்டினத்தின் வாணிப செல்வச் சிறப்பியல்பு களை விரிவாக விளம்பி, கரிகாலனது பெருமையினைச் சுருங்க

உரைப்பதின் வழி விளங்க வைத்து, முதலுங் கருவுங் கூறுது. பாலைத் திணைக்குரிய உரிப்பொருளென்னும் அகப்பொருட் பகுதியினை மட்டும் சுருக்கமுற சுவை முதிரும்படி யாத்துக் கோத்து பட்டினப்பாலைப் பாட்டினை முடித்துள்ளார்.

சுரமும், அதனைச் சார்ந்த இடமும் பற்றிக் கூறுவது பாலையாயினும், அப்பாலைக்கும் ஒவ்வுமாறு, இப்பாட்டில் ஆசிரியர் மருதநிலத்தியல்பினையும் நெய்தல் நிலக் காட்சியினையும் இன்ப மூட்டும் வகையில் சுவைபடக் கூறி மனவியற்கைக்குத் தக சிலவுணர்ச்சிகளுக்கும் இடமாக்கியுள்ளார். மேலும் ஏனைய திணைச் செய்திகளையும் விரவ வைத்து. பாலைத் திணைக்குரிய உணர்ச்சி மிகுதியை ஆசிரியர் வலியுறுத்திய போக்கு வியத்தற் பாலது. பொருளிலக்கண வல்லார், இப்பாட்டினை மேற் போக்காக ஒருமுறை உற்றுநோக்கின், இது முதலுங் கருவுங் கூறுது உரிப்பொருளொன்றினையே உணர்ச்சி பெருகக் கிளர்ந் தோதப்பட்டிருக்கும் கருத்தழகையுணர்ந்து இப்பாட்டினைப் பாலைப் பாட்டு எனக் கூறுது பட்டினப் பாலை என்பர். காவிரிப் பூம்பட்டினத்தின் இயற்கைப் பெருமையினையும், வாணிபத்துச் செல்வச் சிறப்பினையும் இப்பாட்டு கரிகாற்பெருவளத்தானது செங்கோன்மைப் புகழொடு எடுத்துரைத்து நிறைவுறுத்துகிறது; இத்தகைய பட்டினத்தையே பெறினும், தலைவன் தண்ணிய காதலையுடைய தன் தலைவியைப் பிரிய மனம் நண்ணேன் எனக் கூறும் முறையில் இப்பாட்டு அமைந்துள்ளதையும் கவனிக்கற் பாற்று. இந்த அடிப்படையில், கரிகால்பெருவளத்தானுடைய வேலைவிட வெய்ய பாலையினையும், பாலைத் திணைக்குரிய பிரிவைப் பற்றியும் இப்பாட்டு உணர்த்தியுள்ளதையும் சற்று சிந்தித்தலும் வேண்டும். ஆகவே பட்டினத்தின் சிறப்பைப்பற்றி விரித் துரைத்து பாலைக்குரிய காதற் பிரிவைப்பற்றியும் எடுத்துக் கூறுவதினுன், இப் பாட்டு பட்டினப்பாலை என்ருயிற்று.

தலைவியைப் பிரிந்து செல அழுங்குதலாகிய பாலையின் உரிப்பொருளின் விளக்கத்தை இருவேறு இடங்களில் எழி லுறுத்தி இசைக்கப்பட்டிருக்கும் ஆசிரியரது புலமைக்கலை, படிப்பாரது உள்ளத்தைப் பெரிதும் கவர்ச்சிசெய்கின்றமையான், இப்பாட்டு பாலையாயிற்றென்பது கருதத்தக்கது பொருள்வயிற் பிரியக் கருதிய தலைவனது கருத்தை நன்குணர்ந்த தலைமகள். அவ்வாறு பிரிதற்கு ஆற்ருளாய் துயருற்றதைக் கண்டறிந்த தலைவன், அவளைப் பிரியாது நின்ற காரணத்தைத் தன் னெஞ்சிற்கு.

....பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே!
திருமாவளவன் .. ..
வேலினும் வெய்யக் கானம் அவன்
கோலினும் தண்ணிய தடமென்றோளே'

எனக்கூறி தான் செல்லுதலைத் தவிர்ந்த முறையிலே இப்பாட்டினை ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் பாடியுள்ளார். இவ்வணம் தலைவன் செல்லுதல் தவிர்ந்தது. தற்போது ஆற்றுளாகிய தலைவியைப் பின்னர் பலதிறத்தானும் அறிவு வகையாற் வற்புறுத்தித் தேற்றி பிரிதற்பொருட்டாகும். வாழ்வாங்கு வாழ, பொருள் பெரிதும் இன்றியமையாததென்பது யாவருக்கும் உடன்பாடு. ஏனெனில் பொருளின்றி வாழ்வு இல்லை. நல்வாழ்வும் தலைவியுமின்றி இல்லை பொருளில்லார்க்கு இவ் வுலகமில்லையாதலின், தலைவன் நிறைந்த அன்புடையவனாயினும், தலைவியை விட்டுப் பிரிதல் இயல்பு இவ்வாறு பிரிதல் கருதிய நிமித்தத்தின்கண் வந்த ஒழுக்கத்தைப் பாலையென்பர் தொல் காப்பியர். இதனை,

"செலவிடை யழுங்கல் செல்லாமை யன்றே
வன்புறை குறித்தல் தவிர்ச்சியாகும்"

என்பதினாலுணர்க.

'வாகை தானே பாலையது புறனே' என்பது தொல்காப்பியம். வாகைத் திணை சிறந்த வள நுகர்ச்சியினை மிகுதிப்படுத்தும் வெற்றிப் பேற்றினைக் கூறுநிற்கும். திருமாவளவனது வாகை யின் அமைதியை விளக்க வந்த ஆசிரியர், வெற்றிப் போரின் இயல்பால், பகை மன்னர்களது மருதநிலமும், அம்பலங்களும், மன்றங்களும், நாடு நகரங்களும் பாழ்பட்டமையைக் கூறி (239 - 270), பகைவரது பட்டினங்கள் அழிந்ததும் பாலை வாழ்ந்தது என உணர்த்திய மென்மை அறியற்பாற்று. மேலும் கண்ணனார், பாலைத் திணையில் பிறத் திணையின் இயல்புகளைச் சொல்லொணுதென்றொரு நியதியின்மையைச் சுட்டிக் காட்டி, உளத்திலெழும் உணர்ச்சிக்கேற்ப புறப்பொருள் மாறித் தோன்றுவதும், புறப்பொருட் டன்மைக்கியைய அகவுணர்வு வேறுபடுவதும் மனவியற்கைக்கு உகந்ததென்பதையும் தெளிய அறிவுறுத்திய நயமும் காணத்தக்கது.

பொதுவாக. பாலை பிரிதலும், பிரிதல் நிமித்தத்தையும் உணர்த்துதலான். அவ்வுணர்ச்சியினைப் பல்வேறு நிலைகளில் கற்பவர் உள்ளத்தில் விளங்கிப் பெருகுமாறு பெரிதும் கருதி, உருத்திரங்கண்ணனார் இப்பட்டினப்பாலைப் பாட்டினில் அமைத்துள்ளார் கரிகாற்பெருவளத்தான் சிறுவனுயிருந்த காலத்து பகை மன்னர்களால் தன்னரசவுரிமையினின்றும் பிரிதல் ஏற்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ளவன், கூண்டினிலே அடைக்கப்பட்டு வளர்ந்த கூர்உகிர் கொடுவரி குருளைப்போன்ற அவன், பின்னர், திண்ணிய காவலைக்கடந்து தன்னை சிறைப்படுத்திய பகைவர்களை வென்று தன் அரசுரிமையினை முறையாலே பெற்றவன். இவ்வாறு அரசுரிமையினின்று பிரிதல் காரணத்தையும் பின்பு அதனைப் பெற்ற வகையினைக் கூறவந்த ஆசிரியர், அதனை உவமை வாயிலாக அழகுபட மொழிந்த விரகினை ஆய்ந்து உன்னற்பாலது.

''அருங்கரை கவியக்குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு''

என்ற உவமை. கரிகாற்பெருவளத்தான், நண்ணார் திண் காப்பு ஏறி தாயம் ஊழின் எய்திப் பெற்றதினைக் குறிக்கும் பிடியோடிருந்து பிரிந்த ஓர் யானை தான் அகப்பட்ட குழியிலிருந்து ஏறுதற்கு அரிய கரைகளை இடியுமாறு தன் கோட்டாலே குத்திக் குழியைத் தூர்த்து தன் பிடியினிடத்தே சென்று சேர்ந்தாற்போல, கரிகால்பெருவளத்தான் இழந்த தன்னரசுரிமையினை மீண்டும் முறையாலே பெற்று மகிழ்ந்தான் என்றூர் ஆசிரியர். ஈண்டு ஒப்புமை காணும் ஆற்றல் முறையின் வழி, பாலைத் திணையின் பொருள் சிறப்பினையும் அத்திணையின் உயர்ந்த கருத்தமைதியினையும் ஆசிரியர் குறிப்பாற் புலப்படுத்தி. பாலையொழுக்கத்து நுட்பத்தைப் பாட்டினிலே தெளிய விளங்க வைத்துச் சிறப்புடையதாக்குவது போற்றற்பாலது. மற்றும் பாலைக்குப் புறனுகவுள்ள வாகைக்குரிய வெற்றி வலியினையுணர்த்தவேண்டி திருமாவளவனைச் சிங்க ஏற்றுக்கு

'அரிமா அன்ன அணங்குடைத்துப்பின்
திருமாவளவன்'

என ஆசிரியர் உவமை கூறி, இதன்முகமாகவும் அவனது வாகைக்கு நிலைக்களனுகவுள்ள வலிமை ஆற்றலையும் மறக்காதலையும் வலியுறுத்துவாராயினர் அரச உரிமையினை முறையால் திருமாவளவன் அரிதிற்பெற்ற காவிரிப்பூம்பட்டினத்

தையும் பெறுவதாயினும், கற்பறம் பேணும் தன் தலைவியைப் பிரிந்து வர இசையாத மனையறங் காக்கும் தலைவனது தன்மையும் ஒழுக்கமும், அறக்காதலை வளர்த்து மீட்டும் இன்பத்தை மிகுவிக்கும் பாலைத் திணையினது இயல்பினைக் குறிப்பதாகும். இவ்வகையால் பல்முறையிலும் இப்பாட்டினிலே வாகைத் திணையின பாலையெனும் அகத்திணைக்குப் புறனக விளங்கும் இயல்புகளை யாவும் ஆசிரியர் வகையறுத்துத் தெளித்த செவ்வியும் சிறப்பும் சிந்தித்தற்பாலது.

இன்பத்தின் பரப்பினையும், துன்பத்தின் ஆழத்தையும் பாட்டுக்கலையில் பயன்படுமாறு ஆசிரியர் உருத்திரங்கண்ணனர் விளக்கி, பற்றில்லாது மனம் பக்குவம் பெருக, துன்பத்தினில் விளையும் தூய்மைக்கு அறிவொளி நிலையாகப் படர உருக் கொடுத்து, பிரிவில் வருத்தத்தை உண்டாக்காதவாறும் செய்து விடுகிறர். மற்றும் பிரிவினல் வருந்தும் உள்ள நிலை, அறிவு, இச்சை, செயலாகியவற்றை ஆற்றி முடிப்பதின் வாயிலாக நிறை வெய்தத் தூண்டும் வகையினையும். நெஞ்சை முதலாக வைத்து உண்மையினை அதன்பாற் சேர்க்கும் முறையாலே புலப்படுத்தி யுள்ளார் இன்பப் பகுதியாய அகத்தையும் அறப்பகுதியாய புறத்தையும் இப்பாட்டினிலே இணையுமாறு அமைத்து, வாகைக் குரிய வெற்றி மிகுதியையும் பாலைக்குரிய அறக்காதலின் தகுதி யையும் உலகியலைத் தழுவுமாறு வகைசெய்த புலவரின் பரிசினை அவர் பாட்டினிற் கண்டு ஆய்ந்து தெளிவதே கற்பவர்தங் கடனகும்

பட்டினப்பாலையில் பகைவரது நாடுகளை சோழன் பாழ் படுத்தி பாலையாக்கியது அச்சத்தை விளைவிப்பதாகும் என்று புலவர் காட்டி, அத்தகைய செயல் நாடு காக்கும் பொறுப்புடைய மன்னர்க்குத் தகாதது என்று குறிப்பாலுணர்த்தி, தலைவன் பிரிந்த ஞான்று தலைவி தன்னுள்ளத்தை அவன்பால் செலச் செய்து தான்மட்டும் தன்னெழில் பாழ்பட, வறிதாய உடலைத் தாங்கி நிற்கும் நிலையை, பாழ்பட்டுள்ள நாட்டின் நிலையொடு ஒப்புமை காணவைத்தார். அதனல் வெற்றியின் காரணமாகக் கிடைத்துள்ள பல்வளங் கெழுமிய காவிரிப்பூம்பட்டினத்தைப் பெறினும், தலைவன் தலைவியைப் பிரிய விழையான் என சுட்டிக் கூறி; குடிமக்களுக்கும் மன்னனுக்குமுள்ள பிணைப்பையும், மன்னன் மக்களைப் புரக்கும் அன்புத் தொழிலின் ஆழத்தையும் உணரச்செய்த புலவரின் நயம் நம் மனத்தை மகிழ்விக்கின்றது இதன் வழி குடிபுரக்கும் மன்னன் தன்னைத்தான் • ஆண்டு

கொள்ள அறிவுணர்வைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டு மென்றும், குடிமக்களை ஆட்கொள்ள தன்னிதயத்தை அன்பு அருள் வழி உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற கருத்தினைத் தாங்கியதாகவுள்ளது இப்பாட்டு என ஊகிக்க இடனுண்டென்பதும் பெறப்படும்.

இம்முறையில் கரிகாற்பெருவளத்தானது அரசியலின் சிறப்பைப் புகழ்ந்துணர்த்தும் முகத்தான் அவன்மீது பாடப் பட்ட இந்நூலை ஆசிரியர் கடியலூர் உருத்திரங்கண்ணனார், ஒரமயத்தில் வளவனிடம் வாசித்துக் காட்டியபோது, பாலை யாழின் இனிய ஒலியை அவன் கேட்பதுபோலிருந்தது. பட்டினப்பாலையின் நோக்கம், மறநெறிபற்றி யொழுகும் மன்னனை அறத்தொடு பொருந்திச் செல்லும் முறையில் செலுத்தி அவனது மறச் செயல்களில் மாறுதலையுண்டாக்கும் மாண்புடையதாத லான். அதன் நுட்பத்தையும் விழுப்பத்தையும் அறிந்து மகிழ்ந்த நற்றமிழ் வளவன், தானந் தழைப்பத் தழைப்பது தண்டமிழே யெனப் பரிந்துருகும் மனப்பான்மையில் உவந்து, புலவரைப் புகழ்ந்து பதினாறு (sweet sixteen) பேறு பெற பதினாறு நூருயிரம் பொன்னைப் பரிசளித்தான், இதனை,

> "தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
> பத்தொடு ஆறு நூருயிரம் பெறப்
> பண்டு பட்டினப் பாலை கொண்டது"

என துருவிக் கற்கக் கற்க அறிவூறும் கலிங்கத்துப் பரணி கூறும்.

மற்றும் அந்நல்லிசைப் புலவரது நினைவுச் சின்னமாக, சோழ மன்னன் பிறங்கு நிலை மாடத்து உறந்தையிலே பளிங்குக் கல்லாலாய பதினாறுகால் மண்டபமொன்றையும் வரலாற்றுப் புகழிடமாக நிறுவியுள்ளான். பெருமிதம் கொள்ளும்படி காலத்தை வென்று வாழும் இப்பட்டினப்பாலைப் பாட்டிற்கு அதன் எதிர்காலமும் பரிசு வழங்கிய பரிசினையும் காண்குவம். மூன்றும் இராசராசனின் தந்தையாகிய மூன்றும் குலோத்துங்க சோழன், பாண்டிய நாட்டின்மீது படையெடுக்குங்கால் அதனை அழித்ததோடமையாது பாண்டிய மன்னனையும் கொன்றான். தன் தகப்பன் மாண்டதற்காக பழிக்குப் பழி வாங்க, பாண்டியன் முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கி. பி. 1219 ஆண்டில் சோழம்ண்டலத்தின்மீது படையெடுத்து அதனை முற்றிலும் பாழாக்கி, பதினாறுகால் மண்டபத்தை மட்டிலும் அழிக்காது

விட்டுவைத்தான். புலவரின் புலமைக்காக அமைக்கப்பட்ட நினைவுச் சின்னமென்பதை அம்மண்டபத்தின் அடிப்பாகத்தில் பதிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் கண்ட சுந்தரபாண்டியன், நெடுநாட் பகைமையினை மறந்து, சோழன் புகழ் காட்டும் தமிழின்பால் காதல்கொண்டு, அம்மணிமண்டபத்தைச் சோழ மண்ணிலே நல்லவண்ணமிருக்க ஆணையிட்டான். தண்டமிழ் தழைத்து வாழ, இங்ஙனம் சுந்தரபாண்டியன் இறவாப் புகழ் ஓங்குமாறு கொண்டானென்பதை திருவெள்ளறையிலுள்ள சுந்தரபாண்டியனது கல்வெட்டு ஒன்றின்வழி அறியப்படும் இந்நிகழ்ச்சியை, அறிதற்கும் ஆய்தற்கும் மிக்கதோர் தமிழின்பம் பயப்பதாயுள்ள கீழ்க்கண்ட பழம் பாடல்

"வெறியார் தளவத் தொடைச் செயமாறன் வெகுண்ட தொன்றும்
அறியாத செம்பியன் காவிரி நாட்டு ளரமியத்துப்
பறியாத தூணில்லை கண்ணன்செய் பட்டினப்பாலைக் கன்று
நெறியால் விடுந்தூண் பதினாறு மேயங்கு நின்றனவே"

என இறுத்துக் கூறுகின்றதைக் காண்க.

அறநெறி ஆன்ம ஒழுக்கங்களில் சிறந்த கண்ணனாரது பட்டினப்பாலைப் பாட்டு கரிகாற்பெருவளத்தானது அறிவைப் பண்படுத்தி உள்ளத்தையும் செம்மையாக்கி அவனது ஆன்ம வளர்ச்சிக்கு வழிகோலி நின்றதினால், சோழன் நல்லிசைக் கண்ணனாருக்கு தக்கவாறு பரிசில் அளித்து அவரது புலமை வளம் செழிக்க மணிமண்டபத்தையும் நிறுவியுள்ளானென்பது முற்கூறியவாற்றால் தெளிவு இப்பாட்டில் வெகு நளினமாக கண்ணனார் சோழ வேந்தனது மனதில் படியும்படி தன்னைத் தானே வெல்லும் ஆற்றலைக் குறிப்பாக புலனாக வைத்துள்ளார். சோழ மன்னரும் தன்னை வெல்லாதவரை, எத்துணை வெற்றித் துறைகளிலும் பகைவரை வென்றாலும் உலகில் அமைதி தழைப்பது அரிதென அறிந்து தன்னைத்தானே வெல்லவும் நல்லிசைப் புலமையுடையாரது அறிவுரை தேவைப்படுவதையும் சிந்தித்துணர்ந்தார் அதன் பயனாக, பகைவரை அறிவினால் வெல்லும் திறமுடைய வளவன் தன் மற இயல்பு மாறி அற நிலையில் படரும் பண்பினனாயினான். அறநெறி விளக்கும் இக் கருத்தைத் திருத்தமாகவும் எளிதில் உணருமாறு பாட்டின்கண் செவ்விதாக அமைய வரையறுத்து, திறமாகக் கண்ணனார் மொழிந்தது உற்று நோக்கற்பாலது. எனவே பட்டினப் பாலைப் பாட்டினிலே பாலை வெறுமையைப் பசுமையாக்கி, 'அதன் வழி வெறுமை வாழ்வை வளமாக்க, தம்மையுணர்ந்து' தம்மை வெல்வதை ஆசிரியர் சுட்டியுள்ளது நன்கு கண்டுகொள்க.

எண்ணமைப்புள் ஐந்து

[15—1—74 ஆம் நாள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் உழவர் வளநாள் வள்ளுவர் திருநாள் பொங்கல் விழாக் கவியரங்கத்திற் பாடப் பெற்றவை.]

பேராசிரியர். **ச. பாலசுந்தரம்.**

எண்முறையில் தமிழ் வாழ்த்து

1 ஒன்றும் இருமை விளைவுசெய் முத்தமிழ் ஒண்டிறலால்
நன்ளெளிர் நானிலத் தைந்திணை யாறு நடத்திமகிழ்
துன்றுநல் லேழிசை எண்சுவை யொடுந் தொடர்ந்தளித்து
மன்றுள் நவம்புரிந் தாளும் தமிழ்ப்பதம் வாழ்த்துதுமே.

உழவர்க்கும் வள்ளுவர்க்கும் வாழ்த்து

2 பைம்புனல் எரிகால் வானப் பயன்கொள வளத்தால் ஓங்கி
ஐம்பெரும் பூதத்துண்மை அறிவதற் கடியாய் நிற்கும்
செம்புலத் தகத்தேஉள்ள செல்வநல் லுணவை மக்கள்
ஐம்புலன் உவப்ப நல்கும் அன்னையாம் உழவர் தம்மை

3 நசையொடு போற்றி வாழ்த்தி நன்றியால் வணங்குகின்றேன்
இசையொடு மக்கள்வாழ எழில்வளர் முப்பால் பெய்து
திசையெலாம் அறத்தின் சீர்த்தி செழித்திடத் தென்னாட்டின்கண்
வசையறப் பிறந்த தெய்வ வள்ளுவன் மலர்த்தாள் போற்றி!

பொங்கல் வாழ்த்து

4 வயனிறையச் செந்நெல்லும் வளர்க ரும்பும்
வாழைஎழில் மஞ்சளொடு இஞ்சி ஐந்தும்
பயனுதவப் பொங்கிவளர்ந் தோங்கி மக்கள்
பசியறவே அஞ்சாதீர் என வழங்கி
நயனுதவும் தைப்பொங்கல் திருநாள் வாழ்க!
நன்றியொடு நட்புணர்வும் நலமார் வாழ்வும்
வியனுலகில் எங்கெங்கும் பொங்க வாழ்த்தி
வெஞ்சுடரைத் தண்மழையை வணங்கு கின்றேன்.

அவையடக்கம்

5 குடைநிழலில் அரியணையில் வீற்றிருந்து
கோலோச்சும் திருவிருந்தும், புலமைச் சான்றோர்
புடைசூழத் தமிழ்வளர்க்கக் கூடற் சங்கம்
புக்குகவி யரங்கேறிப் புகழ் வளர்த்த
படைநீடும் பாண்டியன்போல். இச்சங் கத்துப்
பாட்டரங்கிற் பாண்டியனாய் வீற்றிருக்கும்
நடைகூருந் தமிழ்க்கவிஞ! வாடை யாலே
நற்றமிழ்மா மயில்பனிக்கக் கூடா தென்ற

6 வற்றாத பேரன்பின் வண்மை யாலே
வனமயிலின் குளிர்நீங்கப் போர்வை ஈந்த
பற்றாளன் பேர்புனைந்த இசைப்பா வல்லோய்!
பயனுடைய ஆங்கிலத்தோ டருங்கலைகள்
கற்றோர்ந்த நல்லறிஞ! கற்பிக் கின்ற
கலைபயின்றோய்! கோட்டாட்சிப் பொறுப்பை ஏற்றுச்
சற்றேனும் பழுதின்றிப் புரிந்து கொண்டே
தமிழ்ப்பணியும் தாங்குகின்ற தமிழின் செல்வ!

7 'பண்'பாட்டிற் பண்பாட்டை வழங்கும் தீந்தேன்
பைந்தமிழின் சுவையமிழ்தப் பாவ ழங்கி
எண்காட்டும் பாட்டரங்கை இயக்கி அன்போ
டிலங்குகின்ற கவியரங்கத் தலைவ! என்றன்
வெண்பாட்டு மொழிவணக்கம் கொள்க! ஈங்கே
வெல்லமிட்ட பொங்கலென எண்கள் பற்றி
நுண்பாட்டுச் சுவையமுது படைத் திலங்கும்
நோக்கமைந்த பாவல்லீர்! நூற்றுவர்க் கோர்

8 சுவைஞரென வீற்றிருக்கும் அவையீர்! நாளும்
தொண்டுதமிழ் முன்னேற்றம் குறிக்கோ ளாக
நவைதவிரச் செயலாற்றும் சங்கச் சான்றீர்!
நனிவணக்கம் அனைவருக்கும் நவிலு கின்றேன்
அவையடக்கம் முடிந்ததினி "ஐந்து பற்றி
அஞ்சாமல் இசைக்க" என ஆணையிட்டார்
அவைத்தலைவர் அஞ்சென்றால் அச்சந் தானே?
அஞ்சுவதஞ் சல்அறிவார் தொழில் என்றோ,யான்

9 தெய்வத்திற் கஞ்சுபவன் என்றோ, நேர்மை
திகழறத்திற் கஞ்சுபவன் என்றோ, வாழும்

மெய்யொழுங்கிற் கஞ்சுபவன் என்றே, கற்ற
மேலவருக் கஞ்சுபவன் என்றே, அன்றி
உய்வுதரும் அஞ்செழுத்தை ஓதி நெஞ்சம்
உருகுபவன் என்றேஇவ் வைந்தாற் பாடல்
செய்கென்றார். செந்தமிழின் இயல்கள் ஐந்தைச்
சிந்தித்துப் பயிற்றுகின்ற காரணத் தால்

10 அளித்தனரோ? அறியேன் யான் அம்பலத்தில்
ஐந்தொழிலைப் பாவனைசெய் தாடும் நாதன்
களித்துமகிழ் ஐங்கரத்தான் கழல்கள் எண்ணிக்
கனிதமிழ் ஐஞ்சீர்கலந்து கவிதைப் பொங்கல்
விளைத்துவிருந் தளிக்கமுயல் கின்றேன். கற்கள்
விரவ.சில வேகவிலை எனினும் அன்பால்
திளைத்தருந்த வேண்டுகின்றேன், சக்கை யின்றிச்
செங்கரும்பிங் கில்லையெனும் அமைதி யாலே.

11 முத்தமிழின் சுவைபொங்க ஒன்றி ரண்டு
மூன்றெடு நான்கெண்பற்றிக் கவிதை கேட்டுத்
தித்திக்கும் சிந்தையொடு திகழ்வீர்! ஐந்தின்
தெய்வநலச் சிறப்பெழில்சீர் முழுதும் என்றன்
புத்திக்கெட் டாதனவென் றாலும் போந்து
புகல்கின்றேன்: படைப்புமுதல் ஐந்தும் ஐந்து
சத்தியினல் ஆம்என்பார் சால்பாம் ஐந்தும்
தாங்கியசெந் தமிழறிஞர். தத்து வத்துள்

12 ஐந்துபெறும் சீர்மற்றை எண்கட் கில்லை
'ஐ'முதலாத் தொடங்குகின்ற சொற்கள் நோக்கின்
விந்தையொடு தலைமைசிறப் பழகு தெய்வம்
வினையுயர்ச்சி சிவம்எனும்பல் பொருளும் தோன்றும்
முந்துபெரும் பூதங்கள் ஐந் தவற்றுல்
முகிழ்த்தவையும் ஐந்தைந்தாய் விளங்கும் காணின்
செந்தமிழின் திணை ஐந்தின் நிலங்க ளைந்தாம்
திகழ்வானம் பொழிகின்ற மழையும் ஐந்தே

13 காலெடுத்துப் பரவுகின்ற காற்றும் ஐந்தாம்
கைகுவித்து வணங்குகின்ற தீயும் ஐந்து
நூலெடுத்தால் பாயிரம் ஐந்(து) எழுத்துச் சொல்.பின்
நுவல்பொருள் யாப்பணியோ டைந்தாகும், செய்யுள்

பாலணுகின் அசைமுதலாம் உறுப்பைந் தாகும்
பாக்களினுள் பயில்கின்ற அடிகள் ஐந்தே
கோலமுறு பாக்களும் ஐந்தாகும் வெண்பாக்
கொள்ளும்வகை ஐந்தேஉள் ளுறையும் ஐந்தே

14 விண்டுரைக்கும் நூலுரையின் வகையும் ஐந்து
வினவும்வினு வகையைந்து விடையும் ஐந்தாம்
பண்டுதமி ழிசையைந்தே பயிலும் பாலைப்
பண்திறனும் ஐந்தென்பார், பண்ண மைப்பைக்
கொண்டுதிகழ் யாழ்வகையும் ஐந்தாம் தாளம்
கொட்டுகின்ற கருவிகளும் ஐந்தாம் என்ப
தண்டமிழின் நாடகத்துள் ளுறுப்பும் ஐந்து
சார்ந்தநடிப் பிலக்கணமும் ஐந்தென் பார்கள்

15 பஞ்சமிலா ஐந்திற்குப் பஞ்ச மென்று
பைந்தமிழ்ச்சொல் லடியறியார் பகர்வர் ஆங்கே
பஞ்சமெனும் அடையடுத்துப் பயிலும் சொற்கோ
பஞ்சமிலை, பஞ்சணைமேல் ஐம்பாலாரின்
பஞ்சடியின் பால்கிடக்கப் பஞ்சபாணன்
பாய்ச்சுமல ரம்பஞ்சிப் படியா ருண்டோ?
பஞ்சமுக வாசமொடைம் புகையும் கூட்டிப்
பஞ்சரிப்பார் அஞ்சலிக்குப் பணியார் யாரே?

16 கண்டமைந்து கொண்டதனுல் புவிக்குப் பீடு
கடல்மலைக்கும் காட்டிற்கும் பொருள்கள் ஐந்து
கொண்டதனுல் பெருமைநாட் டிற்கும் அற்றே
கோலேந்தும் வேந்தருக்குக் கொற்றம் ஐந்தாம்
மண்டுகின்ற சுற்றத்தால் ஓங்கும், ஆங்கே
மறைந்தொழுகி வரும்ஐந்தாம் படையால் வீழும்
அண்டவரும் பஞ்சமெலாம் அஞ்சி யோட
அரசியலார் தீட்டலுமைந் தாண்டுத் திட்டம்

17 பொதுத் தேர்வைந் தாண்டிற்கோர் முறையென் ருல்நாம்
புரிந்துகொள்ள வேண்டும்ஐந்தின் பெருமை எல்லாம்
புதுமையெனப் பாரதம்முன் வகுத்த கொள்கை
புகழ்பஞ்ச சீலமன்ருே, தமிழகத்தில்
நதிவளம் ஐந்தாகும், அகப்பொருள் வல்லார்
நானிலத்தை ஐந்தாக வகுத்தா ரன்ருே?
எதனுலே ஐந்தினுக்குப் பெருமை? ஈசன்
எழில்முகமும் தொழில் ஐந்ததனுல் என்பார்.

18 விண்ணுலகில் நிதியைந்து மரங்கள் ஐந்து
வேதவழி வேள்புரி தலைவர் ஐவர்
தண்ணியசெந் தமிழ்க்கலையுள் சிறந்த தைந்தாம்
சைவத்தின் பிறபிரிவு ஐந்தாம் சைவர்
எண்ணுகின்ற மூர்த்திகளும் ஐவர் மற்றும்
இயற்றுகின்ற நோன்பும் மந்திரமும் ஐந்தே
பண்ணுகின்ற யாகம்ஐந்து பதிகள் ஐந்து
பணிகின்ற சபையைந்து சீலம் ஐந்தே.

19 தாய்முதற் குரவர்ஐவர் தகுதமிழ்ச் சங்கம்ஐந்து
தோய்தமிழ்க் காப்பியங்கள் தூயதீபங்கள் ஐந்து
பாய்பரி நடைகள் ஐந்து பால்தரும் பொருள்களைந்து
நோய்தவிர் மருந்தும்ஐந்து நுண்பசி நோய்களைந்தே,

20 ஒளிர்தமிழ் எழுத்துள்ஐந்தே உயிரெழுத் தாகும்,செய்யுள்
மிளிர்தரும் தொடைகள்ஐந்து மேவிய அமிழ்தும்ஐந்தே
களிவரக் காமன்எய்யும் கணைகளும் தொழிலும்ஐந்தாம்
தெளிவுறின் பாரதத்துள் திராவிடநா டைந்தென்பார்

25 மலைமணி மணிகள்ஐந்து மணதரும் உலோகம்ஐந்தாம்
அலைவிலா அறிவுநல்கும் ஆசிரியன் மாரும்ஐவர்
தொலைவிலா வென்றிசேர்க்கும் சூழ்ச்சிகள்ஐந்தென்பார்வான்
தலைவராம் தேவர்ஐவர் சமணர்கள் வணங்கி அன்பால்

22 போற்றுபர மேட்டிகளும் ஐவர் தேவன்
புரிகின்ற ஞானமும்ஐந் தாகும் ஐந்தை
ஏற்றுயர்வு கூறாத சமயம் இல்லை
எண்ணுங்கால் பொறியைந்து புலன்கள் ஐந்து
நீற்றறையில் நாவரசைக் குளிரக் காத்து
நெடுங்கடல்மேல் கல்மிதக்கச் செய்த தெல்லாம்
ஆற்றல்தரும் ஐந்தெழுத்தென் றறைவார் சைவர்
அஞ்சினுக்கு விஞ்சியதோர் எண்ணு மில்லை,

23 விஞ்சுபுகழ் தஞ்சமுறும் அஞ்சைப் பற்றி
வெறுப்பளிக்கும் பாதகங்கள் குறைகுற் றங்கள்
நஞ்சமைந்து நிற்பதனைக் காணின், நல்லோர்
நடுவிலுமோர் குறையிருக்கும் தத்து வத்தை
நெஞ்சமுற அறிவிக்கும்: விரல்க ளைந்தும்
நிகராக இலையென்ப தெடுத்துக் காட்டாம்
அஞ்சுபற்றி இன்னும்பன் னூறுண் டிங்கே
அழகுதரும் வண்ணங்கள் அளவை, யாவும்

24 ஆராயின் ஐந்தாகும் தொகைஆ றுக்குள்
அன்மொழியல் லாத்தொகைகள் ஐந்தே யன்றோ?
சீரான வேதாந்த சித்தாந் தத்துள்
செறிந்துநிற்கும் ஐந்தினக்கோர் அளவே இல்லை
ஊராளும் ஆயத்தார் ஐவர், ஐந்துள்
ஒடுங்காத பொருள்சிலவே, முழுதுஞ் சொல்லித்
தீராதிங் காதலினல் மேலும் செப்பிச்
செவிதரும்நும் பொறுமையினை சோதத் தற்கு

25 அஞ்சி, இங்கே அச்சமிலா தோடும் கால
அளவைக்கும் அஞ்சி. இந்த அளவிலே என்
அஞ்செனும்என் கவிதையினை அடக்கு கின்றேன்
அஞ்சுபெற்றல் அரசனுமே ஆண்டி என்பார்
அஞ்செனக்குத் தந்தாண்டு கொள்க என்ற
அன்புமிகு தாளாளர் அமைச்சர்க்கும் என்
பிஞ்சுகவி செவிமடுத்த தலைவ ருக்கும்
பேரவைக்கும் கைகூப்பு வணக்கம் நன்றி.

அடிக்குறிப்பு

பாடல் 9 அஞ்செழுத்து: நமசிவய.
இயல்: எழுத்து, சொல் பொருள், யாப்பு, அணி.

10 ஐந்தொழில்: படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல்.
ஐஞ்சீர். அசைச்சீர், இயற்சீர், காய்ச்சீர், கனிச்சீர். பொதுச்சீர்,

11 சக்தி ஐந்து: இச்சா சக்தி. ஞானசக்தி, கிரியாசக்தி, சிற்சத்தி, பராசக்தி.
சால்பைந்து: அன்பு. நாண், ஒப்புரவு. கண்ணோட்டம். வாய்மை,

12 பூதமைந்து: நிலம். நீர். தீ. வளி, வான்.
திணை-நிலம்: குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.
மழை ஐந்து: ஆர்கலி. உறை, பனித்தல், துளித்தல், பெய்தல்.
அல்லது
புகை, தூறல், பொழிதல், அடைமழை, ஆலங்கட்டி மழை.

13 காற்றைந்து: சிறுகாற்று. பெருங்காற்று, புயல், சூரை, சுழல்.
தீயைந்து: மடைத்தீ, விளக்குத்தீ, வேள்வித்தீ, காட்டுத்தீ, ஊழித்தீ. இன்னொரு வகை. காலாக்னி, காடாக்னி, தீபாக்னி, சாடராக்னி, தாபாக்னி
பாயிரம்: நூல். நுவல்வோன், நுவலுந்திறன், கொள்வோன, கோடற்கூற்று
செய்யுளுறுப்பைந்து: அசை, சீர், தளை, அடி, தொடை
அடியைந்து: குறளடி, சிந்தடி. அளவடி. நெடிலடி, கழிநெடிலடி.
பாஐந்து: வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி, மருட்பா.
உள்ளுறை: உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு.

14 உரைவகை: கருத்துரை, பதவுரை, பொழிப்புரை, விரிவுரை, தடைவிடையுரை.
தமிழிசை ஐந்து: தாரம். குரல். உழை, இளி, துத்தம்.
பாலைப்பண் திறம்: தக்கராகம். நேர்திறம். காந்தார பஞ்சமம், சோமராகம், காந்தாரம்.
யாழ்: வில்யாழ், மகரயாழ், சகோடயாழ், பேரியாழ்.
தாளக்கருவி: துடி, பறை, முழவு, கஞ்சம், முரசு.
தாளவகை; சச்சற்புடம், சாசற்புடம், சட்பிதா புத்திரிகம், சம்பத்துவேட்டம், உற்கடிதம்.
நாடக உறுப்பு: கதை, நடிகர், மேடை, திரை, இசை.
நடிப்பியல்: தோற்றம், புனைவு, உரை, மெய்ப்பாடு, வினையம்

15 பஞ்சணை: இலவம்பஞ்சி, செம்பஞ்சி, வெண்பஞ்சி. மயிர்அன்னததூவி, மற்றொரு வகை. பஞ்சி, துகில், மலர், மயிர், தூவி
ஐம்பால்; குழல். கொண்டை, சுருள், முடி, பனிச்சை. மலரம்பு.
பஞ்சவாசம் ஏலம் லவங்கம், கற்பூரம், சாதிக்காய், தக்கோலம்
புகை: அகில், சந்தனம், கருஞ்சீதாரி, குந்துருக்கம், சூடன்.

16 கண்டம்: ஆசியா. ஐரோப்பா. ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா.
கடல்படு பொருள்: உப்பு, முத்து, பவளம். சங்கு, ஒக்கோலை.
காடுபடுபொருள்; அரக்கு, இருல், தேன், மயிற்பீலி, நாவி.
மலைபடுபொருள்: மிளகு, கோட்டம், அகில், தக்கோலம், குங்குமம்.

நாடுபடுபொருள் : செந்நெல், சிறுபயறு, கரும்பு, வாழை, இளநீர்.

அரசச் சுற்றம் : அந்தணர், நட்பாளர், மடைத் தொழிலாளர், மருத்துவர், நிமித்திகர்.

நதி ஐந்து : காவிரி, தென்பெண்ணை, வையை, பொருநை, பாலாறு.

ஈசன்முகம் : ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம்.

18 விண்ணுலக நிதி ஐந்து : சங்கநிதி, பதுமநிதி, காமதேனு, கற்பகம், சிந்தாமணி.

மரங்கள் ஐந்து : அரிசந்தனம், சந்தானம், கற்பகத் தரு, பாரிசாதம், மந்தாரம்.

சிறந்த கலை ஐந்து ; இயல், இசை, நாடகம், சிற்பம், ஓவியம்.

சைவப் பிரிவு : மாவிரதியர், பாசுபதர், காளாமுகர், வாமர், வைரவர்.

நோன்பு : பசி பொறுத்தல், காற்றுப் பொறுத்தல், பழிமொழி பொறுத்தல், வழிபாடுபுரிதல், தவம்புரிதல்

or

கொல்லாமை, கள்ளாமை, புலாலுண்ணாமை, பொய்யாமை, வெஃகாமை.

மூர்த்திகள் : பிரமன், விட்டுணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவர்.

மந்திரம் : ஈசானயநம அகோராயநம, தற்புருடாயநம வாமதேவாயநம, சத்தியோசாதாயநம

யாகம் : பிரம யாகம், பிதுர் யாகம், தேவ யாகம், பூத யாகம், மானுட யாகம்.

பதிகள் : காசி, காஞ்சி, கூடல், தில்லை, அருணை.

சபை. இரத்தின சபை, கனகசபை, ரசிதசபை, தாமிரசபை, சித்திரசபை.

சீலம் : அகிம்சை, சத்தியம், அஸ்தேயம், பிரமசரியம், சங்கிரகம்.

19 குரவர் : தாய், தந்தை, ஆசான், அரசன், மூத்தோன்.
சங்கம் : மதுரைச் சங்கம் மூன்று, காஞ்சி இரண்டு ஆக ஐந்து.
காவியம் : பெரிது ; சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி.
சிறு காவியமும் ஐந்தே.
குதிரைநடை : சுவரிதகம், அக்ரந்திகம், வல்கிதம், ரேசிதம், புலிதம்.
குதிரையின் கதி : மல்லகதி, மயூரகதி, வானரகதி, இடபகதி, மனோகதி.
பால் : பால், தயிர், வெண்ணெய், நெய், மோர்.
ஆண், பெண், பலர், ஒன்று, பல.

மருந்து: மூலிகை, உலோகம், உப்பு, பாடாணம், மணி.
மற்றொரு வகை: காற்று, நீர், உணவு, அறிவு, இன்பம்.
பசி: வயிற்றுப்பசி, தாகம், காமம், உறக்கம், பொருள்
நோய்: வாதம், பித்தம், சிலேத்துமம், பிறஉயிர், இயற்கை.

20 உயிர் எழுத்து: அ, இ, உ, எ, ஒ
தொடை: மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை.
அமிழ்தம்: பால், மழைநீர், கரும்பு, தேன், இளநீர்
திராவிடநாடு: தமிழ், தெலுங்கு, கூர்ஜரம், கன்னடம், மகாராட்டிரம்.

21 மலைமணி. வயிரம், நீலம், பச்சை, மாணிக்கம், கோமேதகம்.
மணி: சுகந்தி, பொன்மரகதம்; மரகதம், மாணிக்கம், முத்து.
இது ஒரு வகை: சிந்தாமணி, சூடாமணி, சூளாமணி, சிபந்தகமணி, கௌத்துபமணி
உலோகம்: இரும்பு, பொன், வெள்ளி, செம்பு ஈயம்.
ஆசிரியன்மார்: நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர், ஞானாசிரியர், அருளாசிரியன் (இறைவன்).
அரச சூழ்ச்சி: அசம்பிரேட்சகாரித்தும் அர்த்த நாசம், சந்திவிக்ரகம், சுகிர்லாபம், மித்திரபேதம்.

22 பரமேட்டிகள்: அருகர், சித்தர், உபாத்தியாயர், ஆசிரியர், சாதுக்கள்
ஞானம்: மதிஞானம், சுருதிஞானம், அவதிஞானம், மனப்ரியாஞானம், கேவலஞானம்.

23 குறை: குருடு, செவிடு, ஊமை, நொண்டி, முடம்.
குற்றம்: கொட்டாவி, நெட்டை, குறுகுறுப்பு, பெருமூச்சு, அலமரல்.
வண்ணம்: கருமை, செம்மை, பசுமை, மஞ்சள், வெண்மை.
அளவை: பிரதிஞ்ஞை, ஏது, திருட்டாந்தம், உபநயம், நிகமனம்,
இன்னும் பல: பஞ்சகற்பம், பஞ்சகன்னியர், ஐங்கனி, பஞ்சமண், பஞ்சதிரவியம், பஞ்சான்னம், ஐங்காரம், ஐவகை ஸ்னனம், பஞ்சபிரளயம், பஞ்சபட்டை, பஞ்சகலை, பஞ்சசுத்தி, பஞ்சகோசம், ஐந்துவிரை, பஞ்சதீர்க்கம், ஐம்பெருங் காட்சி, ஐவகை மன்றம் முதலியனவாம்.